

**சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு**

"நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ள  கருத்திட்டங்களை மீளச் செயற்படுத்துதல், மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெறுவதை முறைப்படுத்துதல் மற்றும் தாமதங்களைத் தடுத்தல்"

மீதான அறிக்கை.

2024 ஆ ஸ் ட்மாதம் 07 ஆம் புதன் கிழமம

**சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் அங்கத்தவர்கள்**

கௌரவ அஜித் மான்னப்பெரும, பா.உ. (தவிசாளர்)
கௌரவ சீ.பீ ரத்னாயக்க, பா.உ.
கௌரவ ஜயந்த சமரவீர, பா.உ
கௌரவ ஜயந்த கெட்டகொட, பா.உ.
கௌரவ துஷார இந்துனில் அமரசேன, பா.உ.
கௌரவ வருண லியனகே, பா.உ.
கௌரவ அகில எல்லாவல, பா.உ
கௌரவ நாலக பண்டார கோட்டேகொட, பா.உ.
கௌரவ அலி சப்ரி ரஹீம், பா.உ.
கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ.
கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ, பா.உ.
கௌரவ வீரசேன கமகே, பா.உ.

**குழுவின் தத்துவங்கள்**

பாராளுமன்ற துறைசார் குழுக்களில் ஒன்றான இக் குழுவின் தத்துவங்கள் மற்றும் செயற்பாடுகள் இலங்கைப் பாராளுமன்றத்தின் 111 ஆவது நிலையியற் கட்டளையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதோடு அத் தகவல்கள் www.parliament.lk எனும் இணையதளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**வெளியீடுகள்**

துறைசார் மேற்பார்வைக் குழுக்களினால் வெளியிடப்படும் அறிக்கைகள் மற்றும் சான்றுகளை பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழு அலுவலகத்திடமிருந்து (II ஆம் இலக்க குழு) அல்லது www.parliament.lk இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

**குழுவின் பணியாட்டொகுதி**

திருமதி. குஷானி ரோஹணதீர - பாராளுமன்றச் செயலாளர் நாயகம்
திரு. சமிந்த குலரத்ன - பதவியணித் தலைமை அதிகாரியும்
பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமும்
திரு.ஹன்ச அபேரத்ன - உதவிச் செயலாளர் நாயகம்
திரு. எம்.ஜயலத் பெரேரா - பணிப்பாளர், சட்டவாக்க சேவைகள்
திருமதி.சூலா ஹேரத் - உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்)
திருமதி துசிதா த சில்வா – பிரதான உத்தியோகத்தர்
திருமதி சமிலா ரூபசிங்க – பிரதிப் பிரதான உத்தியோகத்தர்

**தொடர்புகள் மற்றும் விசாரணைகள்**

இந்த அறிக்கை தொடர்பான சகல ஆவணங்கள் மற்றும் விசாரணைகளுக்காக செயலாளர், சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு, குழு அலுவலகம் II, இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே எனும் முகவரிக்கு ஆற்றுப்படுத்த வேண்டும். பொது விசாரணைகளுக்காக 0112777420/405 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ளவும்.

# உள்ளடக்கம்

**01. அறிமுகம்** ........ 4

**02. கைவிடப்பட்ட கருத்திட்டங்களை ஆராய்தல்** ........ 5

**2.1 நிதிசார்ந்த காரணங்களின் அடிப்படையில் கைவிடப்பட்ட கருத்திட்டங்கள்** ........ 5

**2.1நிதிசாரா காரணங்களின் அடிப்படையில் கைவிடப்பட்ட கருத்திட்டங்கள்** ........ 9

**03. மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குமிடையே மதிப்பீட்டு அறிக்கைகளை பெறும் நடவடிக்கைகளின் போது உத்தேச பெறுமதி மற்றும் மதிப்பீடு செய்வதற்கு விரயமாகும் காலத்தை குறைத்தலும் எதிர்பார்க்கப்படும் வகையில் சீரான பெறுமதியை பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளும்** ........ 14

**04. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் காணி சுவீகரிப்புக் கொள்கை** .. 17

**05. குழுவின் விதப்புரைகள்** ........ 18

**06. குழுவிற்கு அழைக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அலுவலர்கள்** ........ 20

**01.அறிமுகம்**

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் கடந்த 10 ஆண்டுகளில் பல்வேறு செலவினத் தலைப்புகளின் கீழ் பெறப்பட்ட திறைசேரி நிதி மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய நிதியை (own funds) பயன்படுத்தி நாடெங்கிலும் செயற்படுத்தப்பட்டு இன்றளவில் பல்வேறு காரணங்களினால் பணிகள் நிறைவு செய்யப்படாத நிலையில் நிறுத்தப்பட்டுள்ள அல்லது பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்தாலும் உரியவாறு ஏற்புடைய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட முடியாதுபோயுள்ள கருத்திட்டங்கள் தொடர்பாகவும் அதன் மூலம், கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் போதும் முன்னெடுக்கப்படும்போதும் பின்பற்றப்படுகின்ற மூலோபாயங்களில் அல்லது காணப்படும் சட்ட விதிகளில் மாற்றங்களை மேற்கொள்ளுதல் தொடர்பாகவும் சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு கவனம் செலுத்தியது.

இதன் கீழ் 23 கருத்திட்டங்கள் இன்றளவில் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ளதாகவும், அதற்காக 14,949 மில்லியன் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் நகர அபிவிருத்தி அதிகாரசபை 3,842.24 மில்லியன் ரூபாய் தொகையை செலவிட்டுள்ள போதிலும், மேலும் செலுத்துவதற்கு 227.15 மில்லியன் ரூபாய் பெறுமதியான நிலுவைப் பட்டியல்கள் காணப்படுவதாகவும், கருத்திட்டங்களின் பணிகளை நிறைவு செய்வதற்கு மேலும் 9,953.84 மில்லியன் ரூபாய் தேவைப்படுவதாகவும் வெளிக்கொணரப்பட்டது. மேற்படி கருத்திட்டங்களில் நிதி இல்லாமை காரணமாக இடைநடுவே நின்றுபோயுள்ள கருத்திட்டங்களோடு பல்வேறு நிறுவனங்களுக்கிடையே நிலவும் தீர்க்கப்பட வேண்டிய நிறுவனங்கள் சார்ந்த பிரச்சினைகள் காரணமாக நின்று போயுள்ள கருத்திட்டங்களும் அடங்கியுள்ளன. "நூறு நகரங்கள்" எனும் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு இன்றளவில் கைவிடப்பட்டுள்ள 14 கருத்திட்டங்கள் தொடர்பாகவும் குழு கவனம் செலுத்தியிருந்தது. இதன் கீழ் கம்பஹா, பாணந்துறை, அவிசாவளை, ஹோலுவாகொடை, பொரலெஸ்கமுவ, அம்பாறை ஆகிய நகரங்கள் சார்ந்ததாக பொதுச் சந்தைகளை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

நிதி சாராத காரணங்கள், அதாவது பல்வேறு நிறுவனங்களுக்கிடையே காணப்படும் தீர்க்கப்பட வேண்டிய நிறுவனங்கள் சார்ந்த பிரச்சினைகள் காரணமாக நின்று போயுள்ள கருத்திட்டங்கள் தொடர்பாக விசாரிப்பதற்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகாரசபை உள்ளிட்டதாக இலங்கை மின்சார சபை,வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, இலங்கை புகையிரதத் திணைக்களம் மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களமும் குழுவிற்கு அழைக்கப்பட்டன. இதன் கீழ் நின்று போயுள்ள 11 கருத்திட்டங்களில் கொட்டாவ தொடக்கம் மாஹேனவத்த வரையான புதிய நுழைவு வீதியின் நிர்மாணப் பணிகள், அலவ்வ நகர அபிவிருத்தி (வீதி விரிவாக்கல்) பணிகள், கம்பஹா அதி வேக நெடுஞ்சாலையின் யக்கல நோக்கிய நுழைவு வீதியின் நிர்மாணப் பணிகள், இமதூவ நகர் விரிவாக்கல் பணிகள், பேருவானவத்த, எஹேலியகொடை குறைந்த வருமானமுடையோர்களுக்கான வீட்டுத் திட்டம், ஹட்டன் புகையிரத நிலைய அபிவிருத்திப் பணிகள், கம்பஹா மாக்கவிட்ட நெலும்வில உத்தேச தேகப் பயிற்சி நடைப்பாதை கருத்திட்டம், கம்பஹா சியத்த பூங்கா கருத்திட்டம் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலை மறுசீரமைப்பு கருத்திட்டம் ஆகியவை தொடர்பாக குழுவினால் பிரதானமாக பரிசீலிக்கப்பட்டன. நிதி சாராத காரணங்களின் பேரில் நின்று போயுள்ள கருத்திட்டங்களுக்கு ஏற்கனவே 2,531 மில்லியன் ரூபாய் அரச நிதி செலவிடப்பட்டிருந்த போதிலும், இக் கருத்திட்டங்கள் இடைநடுவே நின்று போயுள்ள காரணத்தினால் நிதியும் செலவிடப்பட்டு, மக்கள் தமது வாழ்விடங்களையும் இழந்து, எதிர்பார்க்கப்பட்ட அனுகூலங்களுமின்றி சமூகத்திற்கு பிரச்சினையாக மாறியுள்ளமை குழுவில் வெளிக்கொணரப்பட்டது.

நிதி இல்லாமை காரணமாக இன்றளவில் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள 23 கருத்திட்டங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகையில், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதியில் செயற்படுத்தப்பட்ட 04 கருத்திட்டங்கள் மற்றும் திறைசேரி நிதியில் செயற்படுத்தப்படுகின்ற 19 கருத்திட்டங்கள் தொடர்பாக பரிசீலிக்கப்பட்டன. 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நிதி அமைச்சினால்

வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிதி வழங்கப்படாத காரணத்தினால் பல்வேறு கருத்திட்டங்களின் பணிகள் நின்று போயுள்ளன. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு 2023 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட 4,500 மில்லியன் ரூபாய் தொகையில் பொது மக்களுக்கு கிடைக்கும் சேவையின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய 13 கருத்திட்டங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதோடு அவற்றின் பணிகளை நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன் கீழ் பல்வேறு பிரதேசங்களில் பொதுச் சந்தைகளை நிர்மாணிக்கும் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு குழுவினால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கு ஏற்புடைய கருத்திட்டத்தின் காணி அல்லது கட்டடங்களை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் வருமானத்தை திரட்டி அப் பணத்தை குறித்த கருத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு பயன்படுத்துமாறு குழு பணிப்புரை விடுத்தது. இதன் போது மேற்படி கருத்திட்டங்களின் எஞ்சிய பணிகளை மிகக் குறைந்த செலவில் நிறைவு செய்து அக் கட்டடங்களை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் ஈட்டப்படும் வருமானத்தில் ஏற்புடைய பிரதேச சபை அல்லது நகர சபைகளுக்கு கருத்திட்டங்களின் எஞ்சிய பணிகளை நிறைவு செய்வதற்கேற்ற வகையில் கருத்திட்டங்களில் மீள் திருத்தம் செய்யப்பட வேண்டுமென்பதே குழுவின் அபிப்பிராயமாக காணப்பட்டது. மேலும், அரச மற்றும் தனியார் ஆகிய இரு தரப்பினதும் ஒத்துழைப்புடன் கருத்திட்டங்களின் பணிகளை நிறைவு செய்வதற்கான சாத்தியம் தொடர்பாக ஆராயுமாறும் குழு அறிவுறுத்தியது.

கருத்திட்டங்கள் இடைநடுவே நிறுத்தப்படுவதற்கு கருத்திட்டத்துடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கிடையே முறையான ஒத்துழைப்பு அல்லது இணக்கப்பாடு இல்லாமையே பிரதான காரணம் என குழுவினால் வலியுறுத்தப்பட்டது. மேலும், காணப்படும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் கருத்திட்டங்களை ஆரம்பிக்கும் போது சமூக, பொருளாதார, சுற்றாடல் தாக்கங்கள் தொடர்பாக முன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மிகவும் பயன்மிக்கதும் நன்மை அளிக்கக்கூடியதும் உற்பத்திதிறன் மிக்கதுமான செயன்முறை பின்பற்றப்பட வேண்டுமென குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது.

எஹேலியகொடை நகரின் நெரிசலைக் குறைப்பதற்கு புகையிரத வீதி/நெடுஞ்சாலையை அமைக்கும் போது மிக அவசியமான செயன்முறையை தெரிவு செய்வதற்கு உள்ளூர் அரசியல் தலைவர்கள் மற்றும் ஏற்புடைய நிறுவனங்கள் இணைந்ததான குழு கூடி கலந்துரையாடியிருந்ததோடு அதன் போது புகையிரத வீதி மற்றும் நெடுஞ்சாலை ஆகிய இரண்டு வீதிகளையும் நேர் ஒத்ததாக நிர்மாணிப்பதற்குள்ள சாத்தியம் தொடர்பாகவும் குழுவில் விவாதிக்கப்பட்டது.

துறைசார் மேற்பார்வைக் குழு 2023 ஆம் ஆண்டு மே 25, யூன் 20, ஆகஸ்ட் 08 செப்தம்பர் 07 ஆந் திகதி, திசெம்பர் 06 மற்றும் 2024 ஜுன் 07 ஆந் திகதிகளில் கூடி, நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டு கைவிடப்பட்ட மேற் குறிப்பிட்ட கருத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடியிருந்தது. துறைசார் மேற்பார்வைக் குழு, இத் திட்டங்களின் தற்போதைய நிலையை பரிசீலித்து, இதனுடன் தொடர்புடைய பிரதான அரச நிறுவனங்களான நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து உற்பத்திதிறன்மிக்கதாக கருத்திட்டங்களை மீள ஆரம்பித்து நிறைவு செய்யக்கூடிய வழிமுறைகள் தொடர்பான பல்வேறு பரிந்துரைகளை வழங்கியதைத் தொடர்ந்து, அதன் அடிப்படையில் குழுவின் அவதானிப்புகள், முன்மொழிவுகள் மற்றும் கருத்துக்களை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து அரசாங்கத்தின் பொறுப்புவாய்ந்த துறைகளின் கவனத்துக்கு கொண்டு செல்வதற்காக குழுவினால் மேற்படி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

## 02. கைவிடப்பட்ட கருத்திட்டங்களை ஆராய்தல்

### 2.1 நிதிசார்ந்த காரணங்களின் அடிப்படையில் கைவிடப்பட்ட கருத்திட்டங்கள்

பிரதானமாக நிதிசார்ந்த காரணங்களுக்காக கைவிடப்பட்ட 14 கருத்திட்டங்கள் தற்சமயம் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள நிலையில் இவற்றில் 6 கருத்திட்டங்களுக்கு கேள்வி மனுக்கள் கோரப்படவுள்ளன. இவை தொடர்பான மேலதிக விபரங்களை பின்வரும் அட்டவணையில் எடுத்துக்காட்ட முடியும்.

| | கருத்திட்டத்தின் பெயர் | பிரதேச செயலகப் பிரிவு | தற்காலிகமாக மதிப்பிடப்பட்ட பெறுமதி (திருத்தப்பட்டது) ரூ. மில்லியன் | (திருத்தப்பட்ட) தற்காலிகமாக மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூ. மில்லியன் | செலவு ரூ. மில்லியன் | செலுத்த வேண்டிய பட்டியல்களின் பெறுமதி ரூ. மில்லியன் | நிதி தேவைகள் ரூ. மில்லியன் | 2023.12.31 ஆம் திகதியில் நிலைமை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | வாகன தரிப்பிட அபிவிருத்திக் கருத்திட்டம் | கொழும்பு | 1565.70 | 1245.00 | 657.00 | 15.00 | 588.00 | தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. |
| 02 | நாராஹேன்பிட்டி உத்தேச தொடர்மாடி வாகனத் தரிப்பிடத்தை நிர்மாணித்தல் | நாராஹேன்பிட்டி | 998.00 | 1178.00 | 395.00 | 180.00 | 603.00 | தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது |
| 03 | அம்பாறை சந்தையை நிர்மாணித்தல் | அம்பாறை | 210.00 | 160.00 | 34.00 | | 200.00 | தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது |
| 04 | கடற்கரை பூங்காவை நிர்மாணித்தல் (கட்டம் II) | நிந்தவூர் | 35.00 | 22.00 | 9.00 | | 30.0 | நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது |
| 05 | வலப்பனை வாராந்த சந்தை மற்றும் பலநோக்கு கட்டிடம் | வலப்பனை | 118.80 | 228.00 | 48.00 | | 100.00 | தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது |
| 06 | தலாத்துஓயா வாகனத் தரிப்பிட அபிவிருத்திக் கருத்திட்டம் (கட்டம் II) | கண்டி | 9.18 | 33.62 | 3.62 | | 30.00 | தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது |
| 07 | தவுலகல பொது சந்தையின் அபிவிருத்தி | கண்டி | 10.54 | 31.75 | 1.75 | | 30.00 | தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 08 | ஹபரண சுகாதார வசதிகள் அபிவிருத்தி மற்றும் நிலத்தோற்ற அழகுப்படுத்தல் ("நூறு நகரங்கள்" கருத்திட்டத்தின் கீழ்) | ஹபரண | 18.51 | 40.08 | 3.83 | | 36.25 | தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது |
| 09 | கெக்கிராவையில் உள்ள மலவவெவ நிலத்தோற்ற அழகுப்படுத்தல் | கெக்கிராவை | 18.44 | 33.23 | 8.28 | | 24.95 | தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது |
| 10 | முல்லைத்தீவு பேருந்து நிலையத்தை நிர்மாணித்தல் | முல்லைத்தீவு | 107.00 | 170.00 | 21.00 | | | நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது |
| 11 | மாலிபொடவில் 54 வீட்டு அலகுகளை நிர்மாணித்தல் | கேகாலை | 148.63 | 378.18 | 70.14 | 14.96 | 293.08 | தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது |
| 12 | யாழ்ப்பாண நகர மண்டபத்தை நிர்மாணித்தல் | யாழ்ப்பாணம் | 2350.00 | 3769.70 | 1233.34 | | 600.00 | கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது (முழுக் கருத்திட்டத்திற்கு 2536.36 மில்லியன் ரூபா தேவைப்படுகிறது. கட்டம் i/ என அடையாளம் காணப்பட்ட கட்டிடத்தின் ஒரு பகுதியின் நிர்மாணப் பணிகளை முடிப்பதற்கு ரூ.மி 600.00 தேவையாக உள்ளது |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13 | கொழும்பகே மாவத்தையில் 615 வீட்டு அலகுகளை நிர்மாணித்தல் (எஞ்சியுள்ள பணிகளை மீள வழங்குதல்) | கிருலப்பனை | 6921.41 | | 1254.73 | | 5666.68 | தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது |
| 14 | டொரிங்டனில் 115 வீட்டு அலகுகளை நிர்மாணித்தல் | கிருலப்பனை | 1664.03 | 0.00 | 96.65 | | 1567.38 | தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது |
| 15 | மினுவங்கொடை பொதுச் சந்தை | மினுவங் கொடை | 50.00 | | | | 30.00 | நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது |
| 16 | பேரலந்த சதுப்பு நில பிரதேசத்தில் பொழுதுபோக்குக்கான அபிவிருத்தி கருத்திட்டம் (கட்டம் III) | ராகம | 154.50 | | | | 154.50 | தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. |
| 17 | பொரலஸ்கமுவ பல்நோக்கு கட்டிடம் (கட்டம் III) | மஹரகம | 192.00 | | | | 90.00 | நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது |
| 18 | வரக்காபொலை பேருந்து நிலையம் (கட்டம் II) | கேகாலை | 65.00 | 40.00 | 5.90 | | 50.00 | நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது |
| 19 | அலவ்வ பொதுச் சந்தையின் அபிவிருத்தி (கட்டம் II) | அலவ்வ | 32.00 | | | | 32.00 | நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது |
| 20 | சிஹிலல் மகவீதி அபிவிருத்திக் கருத்திட்டம் (கட்டம் II) | அனுராதபுரம் | 58.40 | | | | 50.00 | தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 21 | உத்தேச அலவ்வ வாகனத் தரிப்பிடம் பாதசாரி கடவைகளை அபிவிருத்தி செய்யும் கருத்திதிட்டம் | அலவ்வ | 116.50 | | 18.31 | | 98.00 | கையளிக்கப்பட வுள்ளது. |
| 22 | உத்தேச ஹொரண சந்தை (கட்டம் IV) இன் எஞ்சியப் பணிகளை வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல் | ஹொரண | 20.00 | | | | 20.00 | நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது |
| 23 | மில்லவவில் 55 வீட்டு அலகுகளை நிர்மாணித்தல் (கட்டம் I-25 வீட்டு அலகுகள்) | மில்லவ | 85.81 | 130.00 | 69.03 | 17.19 | 43.78 | பணிகள் நிறைவு செய்யப்பட்டன. UDA ஆல் சுவீகரிக்கப்பட்டுள்ளது |
| | | | 14949.45 | 7329.56 | 3842.24 | 227.15 | 9953.84 | |

**2.1நிதிசாரா காரணங்களின் அடிப்படையில் கைவிடப்பட்ட கருத்திட்டங்கள்**

பிரதானமாக நிதிசாரா காரணங்களுக்காக கைவிடப்பட்ட ஒன்பது கருத்திட்டங்கள் தற்போது நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் நிறைவு செய்யப்படவுள்ளதுடன், இவை தொடர்பான மேலதிக விபரங்களை பின்வரும் அட்டவணையில் எடுத்துக்காட்ட முடியும்.

| இலக்கம் | கருத்திட்டத்தின் பெயர் | பிரதேச செயலகப் பிரிவு | குழுவில் ஆராயப்பட்ட போது நிறைவு செய்யப்பட்டிருந்த கருத்திட்டத்தின் அளவு | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| 01 | கொட்டாவ தொடக்கம் மாஹேனவத்த வரை புதிய வீதியை நிர்மாணித்தல், (1060 மீற்றர்) வளவ்வத்தைக்கு அருகாமையிலுள்ள ஹைலெவல் வீதியிலிருந்து கட்டுவனவிற்கு அருகாமையிலுள்ள தியகம வீதி வரை (1060 m வரை) | ஹோமாகம | 98% | 98%ஆன பணிகள் முடிக்கப்பட்டுள்ளதுடன், காணிகளை இழக்கும் மக்களுக்காக மாற்று இடம் முன்மொழியப்பட்டுள்ளதால் காணி சுவீகரிப்பு தொடர்பில் காணப்படும் பிரச்சினை பெருமளவில் தீர்க்கப்பட்டுள்ளதாகவும், ஹோமாகம பிரதேச செயலாளருடன் தீர்க்க வேண்டிய எஞ்சிய பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட பின்னர் கருத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்க முடியும் என்பது |
| 02 | பேருவனாவத்தவில் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீடுகளை நிர்மாணித்தல் | எஹெலியகொட | 90% | **<u>நீர் வழங்கல்</u>**<br>பேருவனாவத்த வீடமைப்புத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் குடியிருப்புகளுக்கு நீரை பெற்றுக்கொடுப்பதற்கு எஹெலியகொட பிரதேச சபைக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் மதிப்பீட்டுத் தொகையான 5 மில்லியன் ரூபா பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. எஹெலியகொட பிரதேச சபை நீர் இணைப்பை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.<br>**<u>மின்சாரம் வழங்கல்</u>**<br>வீடமைப்புத் திட்டத் தளத்திற்கு மின்சாரத்தை பெற்றுக்கொள்ளும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், வீடுகளுக்கு மின்னிணைப்புகளை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்குமாறு வீட்டு உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 03 | எஹெலிய கொட பழைய புகையிரதப் பாதை ஊடாக அபிவிருத்தி செய்யப் படும் மாற்றுப் பாதையின் நிர்மாணம் | எஹலியகொட | 80% | மாற்று வீதி அபிவிருத்திக்காக புகையிரத திணைக்களத்தின் பரிந்துரைகளை பெற்றுக்கொடுக்குமாறு 2024/02/02 ஆம் திகதி கடிதம் மூலம் புகையிரத திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இற்றைவரையில் புகையிரத திணைக்களத்தினால் பதிலளிக்கப்படவில்லை. மேற்படி பரிந்துரைகள் கிடைக்கப்பெற்ற பின்னரும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் மாற்று வீதி அபிவிருத்திக்காக குறித்த வீதிக்கருகில் இருக்கின்ற வீடுகளில் வதியும் குடியிருப்பாளர்கள் பேருவனாவத்த வீடமைப்புத் திட்டத்தின் கீழ் உள்ள வீட்டு அலகுகளில் குடியமர்த்தப்பட வேண்டியுள்ளது. |
| 04 | இமதூவ நகர மத்தியில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளல் | இமதூவ | 80% | இமதூவ கருத்திட்டத்தின் வீதி அபிவிருத்திப் பணிகள் மற்றும் சமுதாய நீர் வழங்கல் திட்டத்தை அமுலாக்குவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை பெற்றுக்கொடுக்க முடியுமென 2024/04/04 ஆம் திகதி நடைபெற்ற இமதூவ பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்மொழியப்பட்டது. இதற்கு அமைவாக, மேற்படி நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்ற பின்னர் வீதி அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்பட்ட பின்னர் சகல மீள்நிறுவப்பட்ட விற்பனை நிலையங்களும் கருத்திட்ட இடத்திற்கு இடமாற்றப்படும் நடவடிக்கையும் குடிநீர் வசதிகள் கிடைத்த பின்னர் கருத்திட்டத்திலுள்ள பிரச்சினைகளும் தீர்க்கப்படும். |
| 05 | சியத்த ஈர நில பூங்கா அபிவிருத்தி | கம்பஹா | 60% | நீரேந்தும் சிறு குளத்திற்கு குறைந்தளவிலான இடையூறுகள் ஏற்படக்கூடியவாறு துணைப்பாதையை மாற்றியமைப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை இணங்கியதுடன் குளத்தின் பூங்கா மற்றும் சேதத்திற்குள்ளான இடத்தை நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் கண்காணிப்பின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதியின் மூலம் புனரமைப்புப் பணிகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்<br>அதிவேகப் பாதையை விரிவாக்கும் கருத்திட்டமானது நான்கு வழி வீதியாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென துறைசார் மேற்பார்வைக் குழு யோசனையை முன்வைத்த போதிலும் மத்திய அதிவேகப்பாதை அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் இதனை செய்ய முடியாதென வீதி அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 06 | மாக்கெவிட்ட, நெலும்வில நடைப் பயிற்சி பாதையை நிர்மாணித்தல் (joggin track) (கட்டம் I) | கம்பஹா | 25% | • செலுத்தப்படவுள்ள கொடுப்பனவுகளுக்கு (கட்டம் III) அமைச்சரவை உரிய அனுமதியை அறிவிக்கும் வரையில் நிறுத்தப்பட்டுள்ளது.<br><br>• மரநடுகை, வெளிச்சம், வாகனத் தரிப்பிடம் மற்றும் கழிப்பறை வசதிகளுடன் கூடிய சிற்றுண்டிச்சாலை, சிறுவர் விளையாட்டு நிலையம் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி மண்டபம் முதலியவற்றுக்கான சமநிலைப்படுத்தப்பட்ட திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |
| 07 | ஹட்டன் புகையிரத நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டம். | அம்பகமுவ கோரளை | பெற்றுக் கொடுக்கப்பட்ட ஒப்பந்தங்களில் 100% நிறைவு செய்யப்பட்டன. முழு கருத்திட்டத்தின் 60% பணிகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. | நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கும் புகையிரத திணைக்களத்திற்கும் இடையில் இரண்டு மாற்றுத் திட்டங்களுடன் திருத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வரைவு (i. கூட்டு ஆதன திட்டமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட முந்தைய விற்பனை; ii. புதையிரத திணைக்களத்தினால் இலாபத்தை பகிர்ந்துகொள்ளும் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட முந்தைய விற்பனை) நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் 2023.08.03 ஆம் திகதி இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டதுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு எஞ்சிய பணிகளை முன்னெடுப்பதற்கு கட்டிடங்களை புதையிரத திணைக்களத்திற்கு பெற்றுக்கொடுக்கப்படுமென்பது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 08 | அலவ்வ நகரின் நிலத்தோற்ற அழகுபடுத்தல் மற்றும் நகர அழகுப்படுத்தல் கருத்திட்டம் | அலவ்வ | 17% | 2023/07/14 ஆம் திகதி நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் படி, இலங்கை மின்சார சபை, ரெலிகொம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அலவ்வ பிரதேச சபையுடன் தற்போதைய நிலைமை மற்றும் மேற்படி ஒவ்வொரு தரப்பினரும் தத்தமது பணிகளை நடத்திச் செல்வதில் எதிர்கொள்ளும் சிக்கல்களை கலந்துரையாடுவதற்கு பின்வரும் வழிமுறைகள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டன.<br><br>இலங்கை மின்சார சபையினால் தொகுக்கப்பட்ட எஞ்சிய நிதித் தேவைக்கான (மின்கம்பங்களை மாற்றுதல்) அளவைப் பட்டியல் (BOQ) கொடுப்பனவிற்காக அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மின்சார சபையினால் மின்மாற்றியை மாற்றுவதற்கான பணிகள் (இலக்கம் 3) நிறைவு செய்யப்பட்டன.<br><br>05/ 08/ 2023 அலவ்வ பிரதான வீதியில் இடதுபுறத்தில் நீர்க் குழாய்களை மாற்றுதல் மற்றும் இணைப்புகளை வழங்குதல் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினூடாக 100% நிறைவு செய்யப்பட்டது.<br><br>வலதுபுறத்தில் நீர்க்குழாய்களை மாற்றுவதற்குத் தேவையான நிதியை திரட்டுவதற்கு அளவைப் பட்டியல் (BOQ) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் தயாரிக்கப்பட்டு வருகிறது.<br>நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்ட பின்னர் வீதிகளுக்கு காபட் இடும் பணிகளை விரைவாக நிறைவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யுமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.<br>கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திறைசேரியின் அனுமதி கிடைத்துள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 09 | வெலிக்கடை சிறைச்சாலையை வேறு இடத்திற்கு மாற்றுதல் | ஹொரண | 0.05% | சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் அரச பிரதம மதிப்பீட்டாளருக்கு அறிவிக்கப்பட்டவாறு குறித்த காணிகளின் மதிப்பீட்டுப் பணிகளை துரிதப்படுத்துமாறு குழுவும் இவ்விடயத்தில் தலையிட்டு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.<br>ஹொரண பிரதேச செயலாளரினால் காணியை சுவீகரிக்கும் செயன்முறையை விரைவாக நிறைவு செய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் 31 காணித் துண்டுகளுக்கான முறைப்பாடுகள் அனுமதிக்கப்பட்ட பின்னர் காணி உரிமையாளர்களுக்கு இழப்பீட்டை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்பது. |

**03. மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குமிடையே மதிப்பீட்டு அறிக்கைகளை பெறும் நடவடிக்கைகளின் போது உத்தேச பெறுமதி மற்றும் மதிப்பீடு செய்வதற்கு விரயமாகும் காலத்தை குறைத்தலும் எதிர்பார்க்கப்படும் வகையில் சீரான பெறுமதியை பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளும்**

மேற்படி விடயத்தை அடிப்படையாகக் கொண்டு 2023.08.08 ஆம் திகதி கூடிய சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுக் கூட்டத்தில் பின்வரும் யோசனைகளை நகர அபிவிருத்தி அதிகாரசபை சமர்ப்பித்தது.

**01. அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கும் இடையில் மதிப்பீட்டு அறிக்கைகள் பெற்றுக்கொள்வதில் ஒருங்கிணைப்புப் பணிகளை முறைப்படுத்துதல்.**

**<u>கலந்துரையாடப்பட்ட விடயங்கள்</u>**
மதிப்பீட்டு அறிக்கைகளை பெற்றுக்கொடுப்பதில் தாமதம் ஏற்படுதல் மற்றும் அறிக்கைகளைத் தயாரிக்கும் போது தேவையான ஆவணங்களை அவ்வப்போது கோருதல்.

**<u>தீர்மானம்</u>**

i. நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் மதிப்பீட்டு அறிக்கையொன்றை பெற்றுக்கொடுக்குமாறு கோரிக்கைக் கடிதமொன்றை அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதிப் பிரதம மதிப்பீட்டாளருக்கு மின்னஞ்சல் இணைப்பாக அனுப்புதல்.

ii. குறித்த மதிப்பீட்டு அறிக்கையுடன் தொடர்புபட்ட காணி அமைந்துள்ள மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உப அலுவலகத்திற்குரிய மதிப்பீட்டு உத்தியோகத்தர்களுக்கு மதிப்பீட்டுக் கோரிக்கை கிடைத்து எதிர்வரும் முதலாவது வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடுதல். இதற்கு அமைவாக மேற்படி மதிப்பீட்டுக்குத் தேவையான சகல தகவல்கள், ஆவணங்கள், இசைவுச் சான்றிதழ் முதலியவை தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்களை விழிப்பூட்டுதல்.

iii. மேற்படி மேலதிக தகவல்களை 14 நாட்களுக்குள் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்குப் பெற்றுக்கொடுத்தல்.

**02. அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை மதிப்பீட்டுக் கட்டணத்தை செலுத்தித் தீர்த்தல்.**

**<u>கலந்துரையாடப்பட்ட விடயங்கள்</u>**

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அவ்வப்போது பெற்றுக்கொள்ளும் மதிப்பீட்டு அறிக்கைகளுக்காக 114.27 மில்லியன் ரூபா நிலுவைத் தொகையாக செலுத்த வேண்டியுள்ளதாக மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களால் குழுவுக்கு அறிவிக்கப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான நாடு முழுவதும் காணப்படும் 42 காணிகளில் முதலீடுகளைச் செய்வதற்கு முதலீட்டாளர்களிடம் குத்தகை அடிப்படையில் கையளிப்பதற்கு விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 2021.08.06 ஆம் திகதி கௌரவ நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சரின் தலைமையில் அமைச்சுக்குரிய உத்தியோகத்தர்கள் கலந்துகொண்ட கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டதாக நகர அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள் கருந்துரைத்தனர். இக்காணிகளுக்கு மதிப்பீட்டு அறிக்கைகள் இல்லாமையினால் குறிப்பிட்ட முதலீட்டாளர்களுக்கு காணிகள் தொடர்பில் தேவையான தகவல்களை பெற்றுக்கொடுப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதால் ஆரம்பக் கட்டணமாக 100,000/- ரூபாவை ஒரு காணிக்கு செலுத்த வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. மதிப்பீட்டுக் கட்டணத்தின் எஞ்சிய தொகையை முதலீட்டாளர் குத்தகை பெறுமதியில் 25% ஐ நகர அபிவிருத்தி அதிகாரசபையில் வைப்புச் செய்த பின்னர் செலுத்த வேண்டுமெனவும், இக்கட்டணத்தை செலுத்துதலானது வருட இறுதியை காட்டிலும் தாமதமடையுமெனின் இருதரப்பு இணக்கப்பாட்டில் செயற்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

**<u>தீர்மானம்</u>**

சம்பந்தப்பட்ட 42 காணிகளில், கட்டணம் செலுத்த வேண்டியுள்ள 14 காணிகளில் 07 காணிகளுக்குரிய கட்டணமாக 26.8 மில்லியன் ரூபாவை செலுத்துவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை இணங்கியதுடன் எஞ்சிய கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சின் குறித்த உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி தீர்மானம் ஒன்றை எட்ட வேண்டுமென குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

03. **சொத்துக்கள் மற்றும் காணிகளுக்கான மதிப்பீட்டின் போது பெற்றுக்கொடுக்கப்படும் மதிப்பீட்டுப் பெறுமதிகள் திறந்த சந்தை விலைகளை ஒத்ததாக இன்மையால் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சொத்துக்கள் மீது முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதற்கு விரும்பாமை.**

**<u>கலந்துரையாடப்பட்ட விடயங்கள்</u>**

கடந்த 03 ஆண்டு காலத்தில் கோரப்பட்ட 36 முதலீடுகளில் 10 காணிகளுக்கு மாத்திரமே முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளதாக நகர அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் தெரிவித்த முதலீட்டாளர்கள் குத்தகை பெறுமதி கூடுதலாக காணப்படுவதாகவும் அதற்குச் சமமான பெறுமதிக்கு குறித்த பிரதேசத்தில் அறுதி உரிமையுடன்கூடிய காணியை கொள்வனவு செய்ய முடியுமெனவும் குறிப்பிட்டுள்ளனர்.

**<u>தீர்மானம்</u>**

i. மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொடுக்கும் போது காணி அமைந்துள்ள பிரதேசத்தைச் சூழ்ந்ததாக விரிவான கற்கை ஆய்வை மேற்கொண்டு மதிபீட்டு அறிக்கைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும், இதற்குத் தேவையான சகல தகவல்களையும் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு பெற்றுக்கொடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

ii. மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்குகையில், மதிப்பீட்டு பணத்தொகையை நியாயப்படுத்துவதற்காக கடைப்பிடிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுச் செயன்முறை மற்றும் கணிப்பீடுகள் பற்றிய சுருக்க

அறிக்கையினை குறிப்பிட்ட மதிப்பீட்டு அறிக்கையுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

**04.** மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கும் இடையில் மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்குவது தொடர்பில் எட்டப்படவுள்ள ஒப்பந்தம் மீதான திருத்தங்கள்

**<u>கலந்துரையாடப்பட்ட விடயங்கள்</u>**

நகர அபிவிருத்தி அதிகாரசபை மதிப்பீட்டு அறிக்கைகளை பெற்றுக்கொள்ளும்போது, மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஒரு தலைப்பட்ச ஒப்பந்தத்திற்காக முன்வைக்கப்பட்ட 05 திருத்தங்களை குறிப்பிட்ட ஒப்பந்தத்தில் உள்ளடக்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது. இந்த 05 திருத்தங்களினதும் முக்கிய நோக்கம், மதிப்பீட்டு அறிக்கைக்கான முற்பணத்தொகை செலுத்தப்படும் திகதியிலிருந்து ஆகக்கூடிய 03 மாத காலப்பகுதிக்குள் மதிப்பீட்டு அறிக்கையினை வழங்குவதற்கு மதிப்பீட்டுத் திணைக்களம் இணக்கம் தெரிவிக்க வேண்டும் என்பதாகும்.

**<u>தீர்மானம்</u>**

மேற்குறிப்பிட்ட கலந்துரையாடலின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களை, சேவைபெறுநர் நிறுவனத்துடன் கைச்சாத்திடுவதற்கு உத்தேசிக்கப்படும் சேவை ஒப்பந்தத்தில் உள்ளடக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை, நிதி அமைச்சுடன் கலந்தாலோசித்து மேற்கொள்ளுமாறு மதிப்பீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

**05. நேரடி வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு காணிகளை அப்புறப்படுத்துகையில், பிரதான மதிப்பீட்டாளரின் பெறுமதியிலிருந்து கழிப்பனவொன்றை மேற்கொண்டு செலுத்தக்கூடியவாறு உரிய கொள்கைரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளுதல்.**

**<u>கலந்துரையாடப்பட்ட விடயங்கள்</u>**

ஐக்கிய அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் நடப்பு ரீதியில் ரூபாயின் பெறுமதியில் ஏற்படும் பெறுமதி இறக்கத்தைக் கருத்தில் கொண்டு காணிக்கான பெறுமதியை நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் செலுத்துகையில், குறிப்பிட்டதொரு கழிவுத் தொகையை முதலீட்டாளருக்கு வழங்குவதன் மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர முடியுமென குறிப்பிடப்பட்டது. வழங்க வேண்டிய கழிவினை தீர்மானிக்கையில், காணியின் குத்தகைப் பெறுமதி மற்றும் உத்தேச அபிவிருத்தியின் வழியாக உள்நாட்டு பொருளாதாரத்துக்கு கிடைக்கப்பெறும் நன்மைகள் ஆகிய விடயங்களைக் கருத்தில் கொள்ளுதல்.

**<u>தீர்மானம்</u>**

இது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்து கொள்ளை ரீதியான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல்.

**06. குத்தகைப் பெறுமதியை செலுத்துகையில் ஒரே தடவையில் அதனை அறவிடாது, தவணை அடிப்படையில் செலுத்துவதற்கான வாய்ப்பினை முதலீட்டாளருக்கு வழங்குதல்.**

**கலந்துரையாடப்பட்ட விடயங்கள்**

இது குறித்து கருத்துத் தெரிவித்த நகர அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள் கூறுகையில், தற்போது இதற்குத் தேவையான கொள்கைரீதியான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முகாமைத்துவ சபை பத்திரமொன்றைச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். இதன்போது முதலீட்டாளரின் விருப்பத்துக்கு ஏற்ப குத்தகையை செலுத்துவதற்கான மாற்று வாய்ப்புகளை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

உ-ம் :-

i. குத்தகையில் 25% ஐ செலுத்தியதன் பின்னர் குத்தகை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு சொத்தின் உடைமையை முதலீட்டாளருக்கு கையளிப்பதற்கும், மீதி 75% பணத்தொகையை 10 வருட காலப்பகுதியில் வருடாந்த குத்தகையையாக செலுத்தி முடிப்பதற்குமான வாய்ப்பினை வழங்குதல்.

04. **நகர அபிவிருத்தி அதிகாரசபையின் காணி சுவீகரிப்புக் கொள்கை**

1. கௌரவ அமைச்சரினால் அபிவிருத்திப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களை பொருளாதார, சமூக மற்றும் பௌதீக ரீதியாக அபிவிருத்தி செய்வதற்கான ஒருங்கிணைந்த திட்டமிடலை மேற்கொள்ளுதலும் அவ்வாறு அபிவிருத்தி செய்தல், நடைமுறைப்படுத்துதல், ஊக்குவித்தல் மற்றும் இதனுடன் தொடர்புடைய அல்லது இடைநேர் விளைவான விடயங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1978ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA) தாபிக்கப்பட்டுள்ளது.

2. பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நகரப் பிரதேசங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களைத் தயார் செய்வதற்கு மேற்குறிப்பிட்ட நகர அபிவிருத்தி சட்டத்தின் கீழ், நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு தத்துவம் கையளிக்கப்பட்டுள்ளதுடன், நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 15(1),16(1) மற்றும் 17(1) ஆகிய பிரிவுகளின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உரித்தான காணிகளை பொறுப்பேற்றல், தனியாருக்கு உரித்தாகக் காணப்படும் காணிகளை சுவீகரித்தல் மற்றும் அரசாங்கக் காணிகளை சுவீகரித்தல் ஆகியவற்றின் வழியாக உத்தேச அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும்.

3. 1950ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க காணி கொள்ளல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அடையாளம் காணப்பட்டுள்ள காணிகளை சுவீகரிக்கும் நடைமுறை ஆரம்பிக்கப்படும்.

4. உள்ளூராட்சிமன்ற ஆளுகைப் பிரதேசங்களுக்கென தயார் செய்யப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நகர அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையானது பின்வரும் சந்தர்ப்பங்களில் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்.

i. நகர அபிவிருத்தி அதிகாரசபை நிதியினால் முன்னெடுக்கப்படும் சாத்தியக் கூறு ஆய்வுடனான கருத்திட்ட முன்மொழிவுக்குப் பின்னர் கருத்திட்டங்கள் அடையாளம் காணப்படும். தகுதியுடைய நபரினால் சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன், நகர அபிவிருத்தி அதிகாரசபையினது முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தை பெறுதலும் நிதி பெற்றுக்கொள்ளலும் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். மேலும், காணிகளை சுவீகரிப்பதற்காக நிதி பெற்றுக்கொள்ளல் மற்றும் கருத்திட்டங்களை முன்னெடுத்தல் மீதான முழுமையான பொறுப்பினை நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கருத்திட்ட நடைமுறைப்படுத்தல் பிரிவு ஏற்றல் வேண்டும்.

ii. திறைசேரியின் நிதியினால் முன்னெடுக்கப்படும் தேசிய மற்றும் வலய மட்டத்திலான கருத்திட்டங்கள் அடையாளம் காணப்படும். அமைச்சரவை மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதும் இக்கருத்திட்டத்துக்குத் தேவையான காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சுவீகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர் காணிகளை சுவீகரிப்பதற்கு நிதி வழங்குவது தொடர்பில் பொதுத் திறைசேரியின் வரவு –செலவு திணைக்களத்திடமிருந்து உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

iii. உள்ளூராட்சி நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் கருத்திட்டங்களுக்குத் தேவையான காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர், உள்ளூராட்சி நிறுவனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மொத்த நஷ்ட ஈட்டுத் தொகையை நகர அபிவிருத்தி அதிகாரசபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.

5. நகர அபிவிருத்தி விடயப்பரப்புக்குள் உள்ளடங்காத, வீதி, கல்வி அபிவிருத்தி போன்ற கருத்திட்டங்களுக்கென அடையாளம் காணப்பட்டுள்ள காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகளை நகர அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொள்வதில்லை என்பதுடன், இதற்குப் பதிலாக அந்நடவடிக்கைகளை உரிய நிரல் அமைச்சின் ஊடாக மேற்கொள்ளுதல் வேண்டும்.

## 05. குழுவின் விதப்புரைகள்

1. தற்சமயம் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ள வீட்டுக் கருத்திட்டங்களை தனியார் அல்லது அரச வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் கடன்களைக் கொண்டு பூர்த்தி செய்து அவற்றை விற்பனை செய்வதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். இதன்போது குறிப்பிட்ட கருத்திட்டத்துக்கு ஏற்ப பூர்த்தி செய்வதற்கு உகந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

2.பல்வேறு அரசில் தலைமைத்துவங்களின் கீழ் தோல்வியடைந்த கருத்திட்டங்களை ஆரம்ப வேண்டியிருந்தபோதிலும் பின்னர், இவற்றுக்கு அரசாங்க அனுசரணை கிடைக்கப்பெறாமையினால் அவை இடைநிறுத்தப்பட்டுள்ளன. இத்தகையதொரு நிலைமை இனிமேல் இடம்பெறாதிருக்க இக்கருத்திட்டங்கள் குறித்தும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள புதிய கருத்திட்டங்கள் குறித்தும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையில் உயர் பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய சட்டரீதியான அதிகாரமிக்கதொரு குழுவை நியமித்தலும் இது சார்ந்த தீர்மானங்களை மேற்கொள்ளுதலும் வேண்டும். மேலும், அரசியலமைப்புப் பேரவையின் ஊடாக இக்குழுவுக்கான பிரதிநிதிகள் நியமிக்கப்படுதல் வேண்டுமென சிபாரிசு செய்யப்பட்டது.

3.தற்போது நிறுத்தப்பட்டுள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கருத்திட்டங்களில் மாற்றங்களைச் செய்து, இக்கருத்திட்டங்களை சுயமாக நிதியை பெற்றுக்கொள்ளக் கூடியவையாக மாற்றி நடைமுறைப்படுத்துதல்.

4. தேசிய மட்டத்திலான கருத்திட்டங்கள் பல்வேறு நிறுவனங்களுக்கு இடையிலான பரஸ்பர அதிகார பரிமாற்றல் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளமையினால் இவற்றை ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்துவதில் சனாதிபதி செயலகம் தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

5. காணிகளை சுவீகரித்து பயன்படுத்துகையில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்கானதொரு செயன்முறையை தயார் செய்தல் வேண்டும்.

இங்கு கீழே குறிப்பிடப்படும் நிறுவனங்களிலிருந்து தலா ஒரு பிரதிநிதியை அங்கத்தவராகக் கொண்டு அமைக்கப்படும் குழுவானது, சனாதிபதி அலுவலக பிரதிநிதிகளின் தலைமையில் மாதமொன்றுக்கு ஒரு தடவை கூடி இந்நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**அந்நிறுவனங்களாவன,**

சனாதிபதி செயலகம் - ஏற்பாட்டாளர்

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

நகர அபிவிருத்தி அதிகாரசபை

காணி அமைச்சு

நிலஅளவைத் திணைக்களம்

காணி ஆணையாளர் திணைக்களம்

6. காணி மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற்றுக்கொள்கையில், அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் மதிப்பீட்டு அறிக்கைகளின் பெறுமதிக்கும் வேறு விதமாகப் பெற்றுக்கொள்ளப்படும் மதிப்பீட்டு அறிக்கைகளின் பெறுமதிக்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்படுவதன் காரணமாக, அரசாங்க மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்குகையில், இவற்றுக்கு அடிப்படையாகக் கொள்ளப்படும் அளவுகோல்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ள விடயங்களை தெளிவாகக் குறிப்பிட வேண்டுமென்பதுடன், குறிப்பிட்ட அளவுகோல்களை இந்த அறிக்கைகளைக் கோரும் தரப்பினருக்கும் வழங்குதல் வேண்டும்.

7. தனியார் முதலீட்டாளர்களுக்கு சொத்துக்களை வழங்குகையில் அரசாங்கத்தின் மதிப்பீட்டு விலைகளில் முதலீட்டாளர்கள் கொள்வனவு செய்ய முன்வராத சந்தர்ப்பங்களில், குறிப்பிட்ட மதிப்பீட்டு அறிக்கைகளை மதிப்பீட்டு திணைக்களத்துடன் இணைந்து மீள்பரிசீலனை செய்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக, நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அடையாளம் காணப்பட்டுள்ள காணிகளுக்கு முதலீட்டாளர்களை அழைக்கையில் (Request for proposals) காணியின் பெறுமதியை உரிய முதலீட்டாளருக்கும் உரிய அளவுகோல்களுக்கும் அமைய, அங்கீகரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டாளரின் கையொப்பத்துடன் பெற்றுக்கொள்வதற்கும், பின்னர் இவ்வாறு தெரிவு செய்யப்படும் முதலீட்டாளர் அதிகாரசபைக்கு வழங்கும் அபிவிருத்தி முன்மொழிவை மதிப்பீட்டு திணைக்களத்துக்கு ஆற்றுப்படுத்தி, குறிப்பிட்ட முன்மொழிவின் பிரகாரம் குறிப்பிட்ட மதிப்பீட்டை திணைக்களம் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் பிரேரிப்பதுடன், இதன்போது மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டுக்கும் அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டுக்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்படும் பட்சத்தில், இது தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபையும் மதிப்பீட்டு திணைக்களமும் கலந்தாலோசித்து உரிய தீர்மானங்களை மேற்கொள்வது உகந்ததென பிரேரிக்கின்றேன்.

**06.  குழுவிற்கு அழைக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அலுவலர்கள்**

**<u>நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு</u>**

திரு.டபிள்யூ.எஸ்.சத்யானந்த, செயலாளர்

திரு.எஸ்.டீ.ஏ.எச்.பியதிலக்க, மேலதிக செயலாளர்

திரு.டீ.டீ.மாத்தறஆரச்சி, மேலதிக செயலாளர் ( திட்டமிடல்)

கலாநிதி.எம்.எம்.எஸ்.எஸ்.பீ.பீ.யாலேகம, மேலதிக செயலாளர் ( கொள்கைகள், கருத்திட்டம் மற்றும் பாராளுமன்ற நடவடிக்கைகள்)

செல்வி. என்.டீ.நாமரத்ன, மேலதிக செயலாளர் ( நகர அபிவிருத்தி)

திருமதி.திலினி சுரங்கிகா கரஸ்நாகொட, சிரேஷ்ட உதவிச் செயலாளர்

திருமதி.டபிள்யூ.பீ.யூ.  காவிந்தியா, உதவிச் செயலாளர் ( நகர அபிவிருத்தி)

திரு.எம்.கே.ரியுஷன், பணிப்பாளர் நாயகம் ( திட்டமிடல் மற்றும் தொழிற்பாடுகள்)

திரு. கே.பாக்கியராசா, பணிப்பாளர் நாயகம் ( திட்டமிடல் மற்றும் தொழிற்பாடுகள்)

பொறியியலாளர், திரு.எம்.டபிள்யூ.பீ.த சில்வா, பணிப்பாளர் நாயகம் ( நகர அபிவிருத்தி)
பொறியியலாளர் எம்.ஏ.பீ.ஜ.கருணாசேகர, பணிப்பாளர் ( நகர திட்டமிடல்)

திரு.எச்.பீ.லலித் குமார, தலைமை நிதி உத்தியோகத்தர்

திரு.எம்.ஏ.பீ.ஜ. கருணாசேகர, பணிப்பாளர் ( நகர அபிவிருத்தி)

திரு.பீ.ஏ.எஸ்.மல்லவாரச்சி, பணிப்பாளர் ( திட்டமிடல் மற்றும் தொழிற்பாடுகள்)

திருமதி.டீ.ஏ.சிறிவீர, பணிப்பாளர் ( காணி)

திருமதி.ஜீ.பீ.வை. குமாரி, தலைமை உள்ளக கணக்காய்வாளர்

திருமதி.என்.ஜீ.டீ.பெரேரா, பிரதி பணிப்பாளர் ( திட்டமிடல் மற்றும் தொழிற்பாடுகள்)

திருமதி.பிரியங்கா சேனாரத்ன, பணிப்பாளர் ( திட்டமிடல்)

திருமதி.எம்.கே.எம்.பிரபோதினீ, உதவிப் பணிப்பாளர் ( நகர திட்டமிடல்)

**<u>நகர அபிவிருத்தி அதிகாரசபை</u>**

திரு.பிரசாத் ரணவீர, பணிப்பாளர் நாயகம்

திரு.மஹிந்த விதானச்சி, மேலதிக பணிப்பாளர் நாயகம்

திரு.என்.ஏ.எஸ்.என்.நிஸ்ஸங்க, பிரதிப் பணிப்பாளர் நாயகம் (கருத்திட்டம்)

திரு.ஆனந்த சமரசிங்க, பிரதிப் பணிப்பாளர் நாயகம் ( ஆலோசனை)

திரு.எம்.பீ.ரணசிங்க, பிரதிப் பணிப்பாளர் நாயகம் ( திட்டமிடல்)

திரு.ஈ.ஏ.சீ.பிரியசாந்த, பிரதிப் பணிப்பாளர் நாயகம் ( ஆதனம் மற்றும் காணி முகாமைத்துவம்)

திரு.சம்பத் குணதிலக்க, பிரதிப் பணிப்பாளர் நாயகம் ( நிதி)

திரு.ஏ.எம்.என்.எஸ். பண்டாரநாயக்க, பணிப்பாளர் (நிதி)

திரு.அநுர பிரசன்ன,பணிப்பாளர் ( ஆதனஅபிவிருத்தி)

திருமதி.தயானி பிரன்சிஸ், பணிப்பாளர் ( காணி)

திருமதி.ஏ.டீ.பீ.த அல்விஸ், பணிப்பாளர் ( கொழும்பு மாநகர பிரதேசம்)

திரு.வை.ஏ.ஜீ.கே.குணதிலக்க, பணிப்பாளர் ( மேல் மாகாணம்)

திரு.ஜீ.என்.பிரேமவர்தன,பணிப்பாளர் ( நகர அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டங்கள்)

திருமதி.சந்தனா களுபஹன, பணிப்பாளர் ( சுற்றாடல் மற்றும் நிலக்காட்சி)

திருமதி.லாவண்யா எஸ்.வீரசூரிய, பணிப்பாளர் ( கருத்திட்ட முகாமையாளர் - தென் வலயம்)

திருமதி.பீ.எல்.கே.இந்திகா பாலசூரிய, பணிப்பாளர் ( கருத்திட்ட முகாமையாளர் – வடக்கு வலயம்)

திருமதி.துஷாரி திலகரத்ன, பணிப்பாளர் ( கருத்திட்ட முகாமையாளர் - மேற்கு வலயம்)

திரு.எச்.எம்.சுகத் பிரேமசிறி, பணிப்பாளர் ( சபரகமுவ வலயம்)

திருமதி.எச்.எம்.பீ.ஹேமமாலி மெணிக்கே, மேலதிகப் பணிப்பாளர் ( நகர திட்டமிடல்)

திருமதி.இமாலி ஜயவீர, பிரதிப் பணிப்பாளர் ( கருத்திட்டம்)

திரு.டீ.கே.எஸ்.பீ.சந்தருவன்,பிரதிப் பணிப்பாளர் ( திட்டமிடல்)

திரு.ஏ.டீ.அளுத்பால, உதவிப் பணிப்பாளர் ( நிதி)

திரு.நிமேஷ் சந்திரதிலக்க, அமுலாக்கல் உத்தியோகத்தர்

**<u>நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு</u>**

திருமதி.ஜே.எஸ்.எஸ்.ரூபசிங்க, மேலதிகப் பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம்

திரு.அசந்த குணரத்ன, பணிப்பாளர், வர்த்தகம் மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களம்

திரு.ஜே.எம்.ஹேரத் பண்டார, பணிப்பாளர், தேசிய வரவு – செலவு திணைக்களம்

திரு.எஸ்.ஏ.ஆர்.தரங்க, பிரதி பணிப்பாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம்

**<u>சுற்றுலா மற்றும் காணி அமைச்சு</u>**

திருமதி.கோகிலா ஹேமசந்திர, பிரதிப் பணிப்பாளர் ( காணி கொள்ளல்)

திருமதி.அஷானி எஸ். செனெவிரத்ன, பிரதிப் பணிப்பாளர் ( காணி கொள்ளல்)

திருமதி. புபுதிகா எஸ். பண்டார, பணிப்பாளர் ( காணி  கொள்ளல்)

**<u>நீர்ப்பாசன திணைக்களம்</u>**

பொறியியலாளர் திரு.பீ.எல்.என்.புராணகெதர, நீர்ப்பாசன பணிப்பாளர் (கொழும்பு)

பொறியியலாளர் திரு.எம்.ஏ.ஜயகொடி, நீர்ப்பாசன பணிப்பாளர் ( பௌதீக வள முகாமைத்துவம்)

பொறியியலாளர் திரு.எஸ்ஆர். வீரரத்ன, தலைமைப் பொறியியலாளர் (சுற்றாடல் கற்கைகள்)

**<u>அரசாங்க  மதிப்பீட்டுத் திணைக்களம்</u>**

திருமதி.டபிள்யூ.கிறிஸ்டின் ஈ பெரேரா, பிரதித் தலைமை மதிப்பீட்டாளர்

திரு.ஏ.வீ.யூ.வசந்த, சிரேஷ்ட மதிப்பீட்டாளர்

திரு.ஆர்.பீ.ஆர்.ஐ.மயுரவங்ச, சிரேஷ்ட மதிப்பீட்டாளர்

திரு.ஏ.கே.மாரசிங்க, மதிப்பீட்டாளர்

திருமதி.எல்.எஸ்.உபேக்சிக்கா, அபிவிருத்தி உத்தியோகத்தர்

**<u>சிறைச்சாலை தலைமையகம்</u>**

திரு.எச்.எம்.டீ.என்.உபுல்தெனிய, சிறைச்சாலை  ஆணையாளர்  நாயகம்

திரு.கே.பீ.பிரசாத் இந்திக்க, பணிப்பாளர் ( பொறியியலாளர்)

திருமதி.என்.சுரன்ஜி விஜேவர்தன, பணிப்பாளர் (திட்டமிடல்)

திரு.ஜே.எம்.எஸ்.யூ.பீ.ஜயசேகர, பணிப்பாளர் ( பொறியியல்)

திரு.பீ.டபிள்யூ.எம்.ஜீ.பீ.திசாநாயக்க, சிறைச்சாலை ஆணையாளர் ( தொழிற்பாடுகள்)

**<u>இலங்கை புகையிரதத் திணைக்களம்</u>**

திரு.வீ.எஸ்பொல்வத்தகே, மேலதிக பொதுமுகாமையாளர் ( தொழிற்பாடுகள்)

திரு.டீ.டபிள்யூ.என்.அமரசேன, பிரதித் தலைமை பொறியியலாளர் ( கட்டிடம்)

திரு.பீ.ஜீ.பிரேமதிலக்க, பிரதித் தலைமை பொறியியலாளர் ( திட்டமிடல் மற்றும் கருத்திட்டம்)

திரு.ஆனந்த கருணாரத்ன, பிரதி வணிக உத்தியோகத்தர் (காணி)

திரு.கே.கே.ஹேவாவிதான, தலைமை  இயந்திரவியல் பொறியியலாளர்

**<u>தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை</u>**

திரு.கே. ஜீ.என்.எஸ்.குமார, பிரதிப் பணிப்பாளர் நாயகம்

திரு.எம்.வை.எம்.ஆசிரி, உதவிப் பொதுமுகாமையாளர்

திரு.ஜீ.டபிள்யூ. தேசப்பிரிய, உதவிப் பொதுமுகாமையாளர்

**<u>வீதி அபிவிருத்தி அதிகாரசபை</u>**

திரு.எல்.வீ.எஸ்.வீரக்கோன், பணிப்பாளர் நாயகம்

கலாநிதி.திரு.எஸ் .ஜே.விதானபத்திரணகே பணிப்பாளர் நாயகம் ( திட்டமிடல்)

திரு.எஸ்.ஏ.எஸ்.டீ.சாலவவிதான, பணிப்பாளர் ( அதிவேக நெடுஞ்சாலைகள் நிர்மாணம்)

திரு.டீ.ஆர்.எம்.டபிள்யூ.ஆர்.எஹலியகொட, மாகாணப் பணிப்பாளர் (சபரகமுவ)

திரு.ஆர்.எம்.ஜே.என்.ரத்நாயக்க, கருத்திட்ட பணிப்பாளர், CEP 1

திருமதி.எஸ்.எம்.எஸ்.எஸ்.சேனாநாயக்க, சிரேஷ்ட கருத்திட்ட பொறியியலாளர் ,CEP 1

திரு.ஏ.எம்.ஏ.வருணஜித், கருத்திட்ட பொறியியலாளர் ,CEP 1

திரு.டீ.சுதர்சன், கருத்திட்ட பணிப்பாளர் ( மேல்மாகாணம்)

திரு.கே.கே.பந்துல, தலைமை பொறியியலாளர் ( காலி)

திரு.ஏ.எம்.ஏ.வருணஜித், கருத்திட்ட பொறியியலாளர்

திருமதி.டீ.டீ.எம்.ஐ.திசாநாயக்க, பொறியியலாளர்

**<u>இலங்கை மின்சார சபை</u>**

பொறியியலாளர் திரு.யூ.ஜீ.ஜே.கே.கம்லத், தலைமை பொறியியலாளர் ( திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)

**<u>பிரதேச செயலகம் – கம்பஹ</u>**

திருமதி. சுரங்க லக்ஷினி குணதிலக்க, பிரதேச செயலாளர்

செல்வி. சமரி இனோகா ரணவீர, விசாரணை உத்தியோகத்தர்

**<u>பிரதேச செயலகம் – எஹலியகொட</u>**

திரு.எச்.சீ.என்.தர்மபால, பிரதேச செயலாளர்

**<u>பிரதேச செயலகம் – ஹொரண</u>**

திருமதி.கே.டீ.எஸ்.சஜீவனா, பிரதேச செயலாளர்

**<u>மா நகர சபை – கம்பஹ</u>**

திருமதி. ஜே.ஏ.டீ.ஜீ.எஸ். ரணசிங்க, நகர ஆணையாளர்

**<u>சியத்த கருத்திட்டம் - கம்பஹ</u>**

திரு.எஸ்.எம்.ஏ.ஜே.யூ.சமரகோன்

திரு.என்.டீ.பீ.வை.நாணாயக்கார

திரு.டீ.எம்.ஜீ.தசநாயக்க

திரு.ஏ.ஏ.டீ.ஆர்.பீ.ஆரியப்பெரும

திருமதி.டபிள்யூ.ஏ.பீ.ஷர்மலீ பெரேரா